# பாக்கியவான்!



**பொ**ருநை
நாகரீகம் தெரியுமான்னு
கேளுங்க

பொறாமை
நாகரீகம்
தான்
தெரியும் என்பார்..

கீழடி
தெரியுமான்னு
கேளுங்க

காலடி
மட்டுமே
தெரியும் என்பார்

எட்டுக்கால்
பூச்சிக்கு
பத்துக்கால்
என்பது போல்

"கம்பராமாயணம் எழுதியது
சேக்கிழார்"
என்பதை
கண்டறிந்த
ஆற்றலாளர்..

"தேர்ந்து"
எடுக்கப்பட்ட
முதல்வர்களுக்கு
மத்தியில்

"ஊர்ந்து"
எடுக்கப்பட்ட
ஒரே முதல்வர்

என்னும்
கல்வெட்டுக்கு
உரிய
கால பயில்வான்..

பத்துத்
தேர்தல்களில்
தொடர்ந்து
தோற்று
அரியர்களுக்கு
மாணவனாகி

இப்போது
அமித்ஷாவின்
சீடனாகி இருக்கும்

எடப்பாடி
என்கிற
மூதறிஞர் தான்..

இப்போது

பாதி பா.ஜ.க.
ஆகி விட்ட

அரை
நூற்றாண்டு
கால
அண்ணா
தி.மு.க.வுக்கு
முடிவுரை
எழுதி வருகிறார்
என்றால்

எடப்பாடி
பழனிச்சாமி

அன்னயாவினும்
புண்ணியம்
செய்த
பாக்கியவான்
அல்லவா...

**என்னநாஞ் சொல்றது!**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித்
தொடர்புக்குழு துணைத்
தலைவர்

திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு

# 'வள்ளலார் நெடுஞ்சாலை' எனப் பெயர் சூட்டப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப்.3 –

திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு 'வள்ளலார் நெடுஞ்சாலை' எனப் பெயர் சூட்டப்படும் என, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து, முதல்வர் அவர்கள் வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**புதிய அறிவிப்பு : திருவொற்றியூர் நெடுஞ்சாலை, இனி வள்ளலார் நெடுஞ்சாலை!**

**நமது திராவிட மாடலில்,**

**வள்ளலார் பிறந்தநாள் தனிப்பெரும் கருணை நாள் ஓராண்டு தொடர்கொண்டாட்டமாக வள்ளலார் முப்பெரும் விழா**

**வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லம் புனரமைப்பு என,**

**வள்ளலாரின் புகழைப் போற்றுவதன் தொடர்ச்சியாக, அயல்நாட்டினரிடமும் வள்ளலாரின் உயரிய கருத்துகளைக் கொண்டு சேர்த்திட, வரும் பிப்ரவரி 15-ஆம் நாள் சென்னை கீழ்ப்பாக்கம் ஏகாம்பரநாதர் பள்ளி வளாகத்தில் அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026 நடத்தப்படும் என்றும்,;**

**மேலும், வள்ளலார் நெறியாளர்களின் கோரிக்கையை ஏற்று, திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு 'வள்ளலார் நெடுஞ்சாலை' எனப் பெயர் சூட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்!**

இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களுக்கான வரிப் பகிர்வு 41 சதவிகிதம் என்று

# ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்வது மிகப்பெரிய அநீதி!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் – கனிமொழி கருணாநிதி கண்டனம்!

புதுடெல்லி, பிப். 3 –

2026–27ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை, ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று முன்தினம் மக்களவையில் தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து, புதுடெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்து கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி பேசினார்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசியது வருமாறு :–

இந்த பட்ஜெட்டை பற்றி பேச வேண்டுமென்றால், ஏமாற்றம், ஏமாற்றம், ஏமாற்றம். அதைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஒன்றிய அரசின் இந்த பட்ஜெட்டில் திருக்குறளும் இல்லை; தமிழ்நாட்டிற்கான எந்தத் திட்டங்களும் இல்லை. தமிழ்நாட்டிற்கான திட்டங்களில் எதுவுமே தெளிவாக இல்லாமல், யாருக்கும் பயன்படும் வகையிலும் இல்லை. இது அடிப்படை இல்லாத ஒரு "AI பட்ஜெட்டாகவே உள்ளது. விவசாயம் குறித்து அதிகமாக பேசாத பட்ஜெட் டாகவே இது அமைந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல், இந்த பட்ஜெட் மாநிலங்களுக்கு எதிரான தாக உள்ளது. ஏனெனில், நிதிக் குழுவின் (Finance Commission) பரிந்துரைப்படி, ஒன்றிய அரசின் வருவாயில் 50 சதவிகிதம் மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அறிவுரை உள்ளது. அதையே மாநிலங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. தமிழ்நாடும், நமது முதலமைச்சர் அவர்களும் இந்தக் கோரிக்கையை



மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அந்தப் பரிந்துரையை கணக்கில்கூட எடுத்துக்கொள்ளாமல், இன்றைய பட்ஜெட்டில் 41 சதவீதம் மட்டுமே வழங்கப்படும் என நிதியமைச்சர் அறிவித்திருப்பது, மாநிலங்களுக்கு எதிரானதாகவும், மாநிலங்களுக்கு மிகப்பெரிய அநீதியை செய்திருக்கக்கூடிய ஒன்று.

முதலமைச்சர் வெளியிட்ட அறிக்கையில், தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதி குறித்து இந்த பட்ஜெட் ஏதேனும் பேசுமா, கல்விக்கான நிதி குறித்து இதில் தெளிவு கிடைக்குமா என்று கேள்வி எழுப்பியிருந்தார். ஆனால் எதற்காகவும் எந்தத் தெளிவும் இல்லாத பட்ஜெட்டாகவே இருக்கிறது.

ஏற்கனவே தமிழ்நாட்டிற்கு ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நிறைய நிதி வரவேண்டிய நிலையில் உள்ளது. அந்த நிதியை அதிகரித்து வழங்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்திருந்தோம். ஆனால் தற்போது அதையும் குறைத்துள்ளனர். இவ்வாறு மாநிலங்களுக்கு எதிரான பல்வேறு அம்சங்களை கொண்ட ஒரு பட்ஜெட்.

**தமிழ்நாட்டு கனிம வளங்களை சுரண்டத் திட்டம்!**

தமிழ்நாட்டிற்கு எந்த நிதியையும் தராமல், நம்முடைய கனிம வளங்களை சுரண்டுவதற்காக திட்டமிடப்பட்ட பட்ஜெட்டாகவே இதை பார்க்க முடிகிறது. நம்முடைய அடிப்படை வளங்களை சுரண்டக்கூடிய ஒரு பட்ஜெட்டாக இந்த பட்ஜெட்டை நாம் பார்க்க முடியும்.

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த பா.ஜ.க. அரசு மக்களை நிச்சயமாக ஏமாற்றியுள்ளது என்பது தெள்ளத்தெளிவாக இருக்கிறது. தேர்தல் காலத்தில் இது எதிர்க்கட்சி கள் எடுத்துப் பேசுவதற்கான ஒரு வாய்ப்பாக அமையும். ஆனால் அதையும் தாண்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் வளர்ச்சியையே எப்போதும் முன்னிலைப் படுத்தி வருகிறோம். அதனால், தமிழக மக்களுக்கு இது மிகப் பெரிய அநீதியாகவும், பெரும் ஏமாற்றமாகவும் இந்த பட்ஜெட் இருக்கிறது.

பா.ஜ.க.விற்கு தமிழ்நாட்டு மக்கள் வாக்களிப்பது என்பது, சந்தேகத்திற்கு இடமில்லாமல், நிச்சயமாக என்றுமே நடக்காத ஒன்று என்று பதிலளித்தார்.

டபுள் இன்ஜின் சர்க்கார் குறித்த கேள்விக்கு, எங்க வருது டபுள் இன்ஜின் சர்க்கார். அது எந்த காலத்துக்கு வருதோ, அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். ஒரு வேளை, எதை செய்தாலும் தமிழ்நாட்டில் நாங்கள் வெற்றி பெற மாட்டோம்; அதனால் தமிழகத்தை கவனிக்க வேண்டிய அவசியமில்லை என்ற முடிவோடு இந்த பட்ஜெட்டை அவர்கள் தயாரித்திருக்கலாம். இந்த பட்ஜெட்டில் கேரளா, மேற்கு வங்காளம், தமிழ்நாடு – இந்த மூன்று மாநிலங்களும் புறக்கணிக்கப் பட்டுள்ள" என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில், தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கப் போகிறது என்ற கேள்விக்கு; "நம்பிக்கையும் கனவும் என்பது எல்லோருக்குமான உரிமை. அவர்கள் அந்தக் கனவில் இருக்கட்டும்; தேர்தல் வாக்குகள் எண்ணப்படும் போது அந்தக் கனவுகள் கலையும்" என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள கனிம வளங்கள் குறித்து கேள்விக்கு; இது நிச்சயமாக தனியார் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கனிம வளங்களை தாரை வார்த்துக் கொடுப்பதற்கான ஒரு திட்டமே தவிர, இதைத் தாண்டி வேறு ஒன்றுமில்லை. இதனை நாங்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார்.

நிதி அமைச்சர் எப்போதும் திருக்குறளை சொல்லிவிட்டு பட்ஜெட் தாக்கல் செய்வார். தற்போது, திருக்குறளும் சொல்லப்படவில்லையே என்ற கேள்விக்கு இந்த ஆண்டு பட்ஜெட்டில் திருக்குறளும் இல்லை; தமிழ்நாட்டிற்கான திட்டங்களும் இல்லை. அதுபோலவே, தமிழ்நாடும் அவர்களை மறந்துவிடும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.

ஒன்றிய பட்ஜெட்டில்

# நாட்டின் உண்மையான பிரச்சினைகள் புறக்கணிப்பு!


## ராகுல்காந்தி கருத்து!

புதுடெல்லி, பிப்.3 –

ஒன்றிய பட்ஜெட் இந்தியாவின் உண்மையான பிரச்சினைகளை புறக்கணித்துள்ளது. வேலை வாய்ப்புக்கு பட்ஜெட்டில் வழியே இல்லை. விவசாயிகள், ஏழை குடும்பங்கள் கண்டுகொள்ளப்படவில்லை என்று ராகுல்காந்தி குற்றம் சாட்டி உள்ளார்.

**ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த பட்ஜெட் குறித்து மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தியின் விமர்சனம் வருமாறு:**

202627 நிதியாண்டுக் கான மத்திய பட்ஜெட் இந்தியாவின் உண்மையான பிரச்சினைகளான வேலையின்மை, விவசாயி களின் துயரம், உறபத்தி சரிவை புறக்கணிப்பதாக உள்ளது. இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பதையும், உற்பத்தி குறைந்து வருவதையும், விவசாயிகள் துயரத்தில் இருப்பதையும் பட்ஜெட்கண்டு கொள்ளவில்லை. ஏனெனில்



இளைஞர்களுக்கு வேலை இல்லை. உற்பத்தி சரிந்து வருகிறது. முதலீட்டாளர்கள் தங்கள் மூலதனத்தை திரும்பப் பெறுகின்றனர். குடும்ப சேமிப்பு அதலபாதாளத்திற்குச் செல்கிறது. விவசாயிகள் துயரத்தில் உள்ளனர்.

இந்தியாவில் வரவிருக்கும் உலகளாவிய அதிர்ச்சிகள் இவை. இந்த பிரச்சி னைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. திசை மாற்றத்தை மறுக்கும், இந்தியாவின் உண்மையான பிரச்சினைகளை புறக்கணிக்கும் ஒரு பட்ஜெட் என கூறினார்.

**மல்லிகார்ஜீன கார்கே கருத்து!**

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜீன கார்கே: பட்ஜெட் மந்தமானது, ஏமாற்றமளிக்கிறது. இந்தியாவின் உண்மையான பிரச்சினை களை கண்திறந்து பார்க்கவில்லை. மோடி அரசாங்கத் திடம் யோசனைகள் தீர்ந்துவிட்டன.

2026 பட்ஜெட் இந்தியாவின் பல பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களுக்கு ஒரு தீர்வைக் கூட வழங்கவில்லை. மிஷன் மோடு இப்போது சேலஞ்ச் ரூட் ஆகிவிட்டது. நிகர விளைவு: கொள்கை தொலைநோக்குப் பார்வை இல்லை, அரசியல் விருப்பம் இல்லை. இந்த பட்ஜெட் எந்தத் தீர்வுகளையும் வழங்கவில்லை, கொள்கையின்மையின்மையை மறைக்க முழக்கங்களைக் கூட வழங்கவில்லை என்றார்.

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் பெருந்தகை அண்ணா 57வது நினைவு நாள் மலரஞ்சலி!

## மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

வேலூர், பிப். 3 –

பேரறிஞர் அண்ணா தனது சாதுர்ய பேச்சாற்றலாலும் முற்போக்கான எழுத்தாற்றலாலும் தமிழ் சமூகத்தை சிந்திக்க வைத்து தந்தை பெரியாரின் முற்போக்கு சிந்தனை




களை உள்வாங்கி அனைத்து தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து திமுக எனும் சமூக இயக்கத்தை தோற்றுவித்து ஆட்சி பீடத்தில் அமர்ந்து எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்தி அதன்மூலம் இன்று கழகத் தலைவர் தளபதி தலைமையில் திராவிட மாடல் ஆட்சிக்கு அடித்தளம் அன்றே அமைத்து தென்னாட்டு காந்தியாகவும், இந்நாட்டின் இங்கர்சலாகவும் திகழ்ந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 57ம் ஆண்டு நினைவு நாளை போற்றும் வகையில் இன்று ( 03.02.2026 – செவ்வாய்க்கிழமை ) காலை 09.00 மணிக்கு வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு வேலூர் மாநகர திமுக அலுவலகத்திலிருந்து மௌன ஊர்வலம் புறப்பட்டு பழைய மாநகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கழகத்தினர் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் அணைக்கட்டு மற்றும் குடியாத்தம் சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் வகையில் ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்து அனைத்து நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோரை ஒன்றிணைத்து சிறப்பித்திட வேண்டுமாய் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.எஸ். முருகேசன்
பிப்ரவரி 3 (2004)



**மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.**

**கூத்தைப்பார் ஊராட்சி மன்றத் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1977ல் திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அந்தோ! அந்தப் பிப்ரவரி மூன்றாம்நாள்!



**ப**ங்காரு நடராசர்
பாருக்குக் கொடுத்த கொடை
பொங்கும் கடலோரம்
போய்ப்புதைந்த நாள்இதுதான்!
ஆவி தமிழ்க்கென்றே
அவதரித்த உயிர்க்கனியைப்
பாவி கொடுங்காலன்
பறித்துவிட்ட நாள்இதுதான்!

நினைந்துவைத்த ஆர்வத்தால்
நெக்குருகி, இயற்கைத்தாய்
புனைந்துவைத்த
எழிற்கவிதைப்
பூ உதிர்ந்த நாள்இதுதான்!
புயல்கிளப்பித் தமிழ்நாட்டில்
பொழுதெல்லாம் கூவிவந்த
குயிற்பறவை சிறகொடுங்கிக்
கூடடைந்த நாள்இதுதான்!

வரம்கிடைக்கத் தவமிருந்து
வாய்த்ததுபோல், காதுகளில்
சுரம்வளர்த்த புதுக்குரலின்
சுருதிநின்ற நாள்இதுதான்!
வைத்திருந்த பற்றெல்லாம்
வளர்த்திருந்து, தமிழர்மேல்
மொய்த்திருந்த விழிக்கதவு
மூடிவிட்ட நாள்இதுதான்!

ஏடென்றும் எழுத்தென்றும்
ஏறுகின்ற மேடையென்றும்
ஓடாய் உழைத்தமகன்
ஓய்வெடுத்த நாள்இதுதான்!
ஆக்கத்தில் துணையிருப்பான்
அண்ணன்பல் லாண்டு,எனும்
ஏக்கத்தில் எல்லோர்க்கும்
இடிவிழுந்த நாள்இதுதான்!

வெயில்,மழையைப் பாராமல்
வீதியெங்கும் தமிழ்மணக்கப்
பயணம் தொடர்ந்தவனின்
பணிமுடிந்த நாள்இதுதான்!
இயக்கம்என்றே இயங்கிவந்த
எம்அண்ணா, தன்சுமையை
உயிர்க்கலைஞர் தோள்களிலே
ஒப்படைத்த நாள்இதுதான்!

தன்னைச் சுமந்துபெற்ற
தாய்,உயிரோ டிருக்கையிலே
மன்னன் புகழுடம்பை
மண்சுமந்த நாள்இதுதான்!
பொன்சுமந்த இதயமகன்
போனதெண்ணி விழிகளிலே
தென்னக நதியனைத்தும்
திரண்டுவந்த நாள்இதுதான்!

ஏ!தாழ்ந்த தமிழ்நாடே!
எனக்கொதித்த இனமீட்புத்
தூதுவனை ஐயகோ!
தொலைத்துவிட்ட நாள்இதுதான்!
ஈரா யிரம்ஆண்டு
இரவுகளின் உறக்கத்தை
"ஓர்இரவில்" கலைத்தமகன்
உறங்கிவிட்ட நாள்இதுதான்!

"ஆரியத்தின் மாயை"யினை
அம்பலப் படுத்தி,இருள்
வீரியத்தை விந்தியத்துக்
கப்பாலே விரட்டியநம்
சூரியனைக் காஞ்சிதந்த
சொக்கத்தங் கத்தை,மலர்த்
தேர்சுமக்கப் பொறுக்காமல்
பார்அழுத நாள்இதுதான்!

பத்திரமாய் அழைத்துவந்துப்
பயணத்தின் நடுவழியில்
தத்தளிக்க நம்மையெலாம்
தவிக்கவிட்டுப் போனவனைக்
கத்து கடற்கரைக்கே
கையளித்தோம் நாங்களென்று
தத்துஅளித்த நாள்இதுதான்!
தமிழ்துடித்த நாள்இதுதான்!

வையம் அழிந்தாலும்
வானிடிந்து வீழ்ந்தாலும்
மெய்நடுக்கம் கொள்ளாத
மேதகுநம் பெரியார்!ஆம்!
கை,தலையில் அடித்தபடி
கருஞ்சட்டை நனைந்தபடி
ஐயா பெரியாரே
அழுததுயர் நாள்இதுதான்!

எண்ணியதைச் செய்தவனை
இனஉணர்வை நெய்தவனை
அண்ணனை,நம்
உள்ளொளியை
அந்தோ! இழந்துவிட்டு
மண்ணில் திசையெட்டும
மக்களெல்லாம் விம்மிவிம்மிக்
கண்ணீர் மழைபொழிந்து
கதறியநாள் இதுவேதான்!

அன்றும் அழுதோம்நாம்!
அவர்நினைவு நாளினிலே
இன்றும் அழுவோமோ?
இல்லைஇல்லை!
விழியிரண்டில்
ஊற்றெடுக்கும் கண்ணீரை
ஒதுக்கிப் புறந்தள்ளி
ஆற்றல் மறவரெல்லாம்
அணிவகுத்துப் புறப்பட்டே,

"அண்ணா!நீ மூட்டியதீ
அணையவில்லை! அச்சுடரைக்
கண்ணாக விளங்கியநம்
கலைஞர்,பே ராசிரியர்
தன்னுரிமை கொண்டளித்தார்
"தளபதி"யின் கைகளிலே!
முன்,அவர் நடக்கின்றார்!
முழக்கமிட்ட படி,அவரைப்

பின்தொடரும் தம்பியரின்
பேரணி,உன் "சீரணி"யாம்!
வென்றிடுவோம்! மொழிப்பகையை
வேரறுப்போம்! இதுஉன்மேல்
ஆணை! தமிழ்த்தாய்மேல்
ஆணை! எமையீன்ற
மாணுறுசெந் தமிழ்நாட்டு
மண்மீதில் ஆணை!எனத்

தேடிவைத்தப் பேரறிவுச்
செல்வத்தை, அண்ணாவை
மூடிவைத்த கல்லறைக்கு
முன்நின்று சூளுரைப்போம்!
பொடிவைத்துக் கருத்துக்குள்
புதிர்வைத்து, மடமைக்கு
வெடிவைத்த நம்அண்ணா
வேறெங்கும் போகவில்லை!

கொடிவைத்து நமைக்காக்கும்
கொற்றவராம் "தளபதி"யின்
வடிவத்தில் நம்முன்னே
வாழ்கின்றார்! ஆள்கின்றார்!
ஆமாம் இருக்கின்றார்!
அண்ணன் சிரிக்கின்றார்!
நாமேன் அழவேண்டும்?
நடைபோடு செந்தமிழா!

**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**

